**1.’செல்"என்ற அடிச்சொல்லில் தோன்றிய வினையெச்சம்**

அ)சென்றாய்

ஆ)செல்வாயோ

இ)சென்று

ஈ)செல்லா நின்றனர்

விடை : இ)சென்று

**2.வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக ’காண்"**

அ)கண்டான்

ஆ)காண்க

இ)கண்ட

ஈ)கண்டு

விடை : ஈ)கண்டு

**3.வேர்ச்சொல்லை படர்க்கை பெண்பால் வினைமுற்றாக்குக :’நடி"**

அ)நடித்தார்

ஆ)நடித்தாள்

இ)நடித்தல்

ஈ)நடிப்பாள்

விடை : ஆ)நடித்தாள்

**4.’கூறு"என்பதன் ஏவல் ஒருமை வினைமுற்று**

அ)கூறுதல்

ஆ)கூறுதி

இ)கூறினான்

ஈ)கூற

விடை : ஆ)கூறுதி

**5.வேர்ச்சொல்லில் இருந்து வினையாலணையும் பெயர் தருக ’நடி"**

அ)நடித்து

ஆ)நடித்தல்

இ)நடித்தது

ஈ)நடித்தவனை

விடை : ஈ)நடித்தவனை

**6.வேர்ச்சொல்லைத் தொழிற்பெயராக்குக : ’நில்"**

அ)நின்று

ஆ)நின்ற

இ)நிற்றல்

ஈ)நின்றான்

விடை : இ)நிற்றல்

**7.அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க**

அ)கூடை,குடை,கொடை,கோடை

ஆ)கோடை,குடை,கூடை,கொடை

இ)கொடை,கூடை,குடை,கொடை

ஈ)குடை,கூடை,கொடை,கோடை

விடை : ஈ)குடை,கூடை,கொடை,கோடை

**8.அகர வரிசைப்படி உள்ள சொற்களை கண்டுபிடிக்கவும்**

அ)தமிழ்,தாய்,தூண்,தெய்வம்

ஆ)கற்கண்டு,கழவி,கீதை,காற்று

இ)அன்னை,இலை,உணவு,ஆசை

ஈ)களை,உரம்,நீர்,மண்.

விடை : அ)தமிழ்,தாய்,தூண்,தெய்வம்

**9.அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க**

அ)அன்பு,ஈதல்,ஊக்கம்,உவகை

ஆ)ஈதல்,அன்பு,ஊக்கம்,உவகை

இ)அன்பு,ஈதல்,உவகை,ஊக்கம்

ஈ)உக்கம்,ஈதல்,உவகை,அன்பு

விடை : இ)அன்பு,ஈதல்,உவகை,ஊக்கம்

**10.அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க**

அ)ஊசி,ஞானம்,காகம்,அச்சுதன்

ஆ)அச்சுதன்,ஊசி,ஞானம்,காகம்

இ)ஞானம்,காகம்,அச்சுதன்,ஊசி

ஈ)அச்சதன்,ஊசி,காகம்,ஞானம்

விடை : ஈ)அச்சதன்,ஊசி,காகம்,ஞானம்

**11.ஒரெழுத்து ஒரு மொழிக்கு உரிய பொருளைக் கண்டறிக : ’கா"**

அ)பூச்சி

ஆ)நோய்
இ)சோலை
ஈ)காலை
விடை : இ)சோலை

**12.ஓரெடுத்து ஒரு மொழிக்கு உரிய பொருளைக் காண் ’மா"**
அ)பெரிய
ஆ)சிறிய
இ)அரிய
ஈ)உரிய
விடை : அ)பெரிய

**13.’ஐ" என்ற ஓரெழுத்தின் பொருள்**
அ)தலை
ஆ)தலைவன்
இ)தகுதி
ஈ)தந்திரம்
விடை : ஆ)தலைவன்

**14.ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைத் தேர்க ’ஆ"**
அ)சிவன்
ஆ)பசு
இ)திருமகள்
ஈ)வண்டு
விடை : ஆ)பசு

**15.’கற்றவர்" என்பதன் வேர்ச்சொல்லைத் தேர்க**
அ)கற்க
ஆ)கள்
இ)கற்று
ஈ)கல்
விடை : ஈ)கல்

**16.’செய்தனன்" என்னும் சொல்லின் வேர்ச்சொல்**
அ)செய்க
ஆ)செய்து
இ)செய்த
ஈ)செய்
விடை : ஈ)செய்

**17.மாண்டனள் - இச்சொல்லுக்கு உரிய வேர்ச்சொல்**
அ)மாண்
ஆ)மான்
இ)மாள்
ஈ)மாண்டு
விடை : அ)மாண்

**18.கொடுக்கப்பட்டுள்ள சொல்லின் வேர்ச்சொல்லைக் கண்டறிக ’அடைதல்"**
அ)அடைந்த
ஆ)அடை
இ)அடைந்து
ஈ)அடைப்பு
விடை : ஆ)அடை

**19.கீழ்க்காணும் சொல்லின் வேர்ச்சொல்லைக் கண்டறிக ’கெட்டான்"**
அ)கேடு
ஆ)கெடு
இ)கெட்ட
ஈ)கெட்டு
விடை : அ)கேடு

**20.வெர்ச்சொல்லைத் தேர்வு செய்க ’உண்டான்"**
அ)உண்டு
ஆ)உண்ட
இ)உண்
ஈ)உண்கின்ற
விடை : இ)உண்

**21.ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச சொல்லை அறிக ’ Principal"**
அ)காலேஜ் பிரின்ஸ்பால் இன்று வரவில்லை

ஆ)கல்லூரி பிரின்ஸ்பால் இன்று வரவில்லை
இ)காலேஜ் தலைவர் இன்று வரவில்லை
ஈ)கல்லூரி முதல்வர் இன்று வரவில்லை
விடை : ஈ)கல்லூரி முதல்வர் இன்று வரவில்லை

**22.ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச சொல் எழுதுக Cheque**

அ)பணவிடை
ஆ)காசோலை
இ)வரைவோலை
ஈ)நீட்டோலை
விடை : ஆ)காசோலை

**23.ஒலி வேறுபாடறிந்து சரியான சொற்களைத் தேர்க**

**தலை தளை தழை**

அ)முகம் முதல் செடி
ஆ)உறப்பு கட்டு இலை
இ)முடி சேர்த்தல் மரம்
ஈ)காதுகள் ஒருமை கொடி
விடை : ஆ)உறப்பு கட்டு இலை

**24.ஒலி வேறுபாடநிந்து சரியான சொற்களைத் தேர்க**

**கூரை கூறை**

அ)மேற்கூரை புதுத்துணி
ஆ)மேல்புறம் கூறுபடுதல்
இ)கூர்மை கூறல்
ஈ)கூர்படுதல் சூறையிடல்
விடை : அ)மேற்கூரை புதுத்துணி

**25.ஒலி வேறுபாடு அறிந்த பொருள் காண்**

**பீளை பீழை**

அ)உடல் அழுக்கு இன்பம்
ஆ)கண் அழுக்கு துன்பம்
இ)அழுக்கு மகிழ்ச்சி
ஈ)துன்பம் இன்பம்
விடை : ஆ)கண் அழுக்கு துன்பம்

**26.ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிக**

**களை கழை கலை**

அ)முகவழகு மூங்கில் ஓவியம்
ஆ)தலையழகு தேக்கு புத்தகம்
இ)பல்லழகு கொன்றை பள்ளி
ஈ)கையழகு வாழை கலைதல்
விடை : அ)முகவழகு மூங்கில் ஓவியம்

**27.ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க ’கிளி"**

அ)கிள்ளை
ஆ)பயம்
இ)பிளத்தல்
ஈ)துன்பம்
விடை : அ)கிள்ளை

**28.ஒலி வேறுபாடறிந்து சரியான சொற்களைத் தோந்தெடுக்க**

நரை நறை
அ)வெண்மயிர் தேன்
ஆ)தேன் வெண்மயிர்
இ)போர் தொடை
ஈ)தொடை போர்
விடை : அ)வெண்மயிர் தேன்

**29.ஒரெழுத்து ஒரு மொழியன் உரிய பொருளைத் தேர்க ’பா"**

அ)கதை
ஆ)உரை
இ)சொல்
ஈ)செய்யுள்
விடை : ஈ)செய்யுள்

**30.’நொ" என்றால் என்ன?**

அ)விருந்து
ஆ)வருந்து
இ)மருந்து
ஈ)பருந்து

விடை : ஆ)வருந்து

**31.உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல் 'அடியற்ற மரம் போல"**

அ)அலைச்சல்

ஆ)விழுதல்

இ)அரிய செயல்

ஈ)வெளிப்படுதல்

விடை : ஆ)விழுதல்

**32.உவமையால் விளக்கப்பெறும் பொருத்தான பொருளைத் தேர்ந்தெடுத்தல் 'அடியற்ற மரம் போல"**

அ)அலைச்சல்

ஆ)விழுதல்

இ)அரிய செயல்

ஈ)வெளிப்படுதல்

விடை : இ)அரிய செயல்

**33.எவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க 'உள்ளங்கை நெல்லிக்கனி போல"**

அ)இயலாமை

ஆ)நிலையற்ற தன்மை

இ)மறைதல்

ஈ)தெளிவு

விடை : ஈ)தெளிவு

**34.உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க இருதலைக் கொள்ளி எறும்பு போல"**

அ)பரிகாசம்

ஆ)சுறுசுறுப்பு

இ)தவிப்பு

ஈ)சுடுதல்

விடை : இ)தவிப்பு

**35.பொன்னிகர் மொழிதான் அவருக்குச் சொந்தம் போற்றார் யாரெனினும் அவரும் பந்தம் - இயைபுத் தொடையைத தேர்ந்தெடு**

அ)சொந்தம் - பந்தம்

ஆ)பொன்னிகர் - பந்தம்

இ)மொழிதான் - யாரெனினும்

ஈ)போற்றார் - பந்தம்

விடை : அ)சொந்தம் - பந்தம்

**36.மோனைத் தொடையைத் தேர்ந்தெடு**

அ)அந்தணரும் - வணிகரும்

ஆ)அரசரும் - அந்தணரும்

இ)அந்தணரும் வேளாளரும்

ஈ)வணிகரும் - அரசரும்

விடை : ஆ)அரசரும் - அந்தணரும்

**37.மாங்கனி - இதற்கு இணையான மோனைச் சொல் எது?**

அ)வாழை

ஆ)பலா

இ)மாதுளை

ஈ)ஆப்பிள்

விடை : இ)மாதுளை

**38.பின்வரும் பாடலில் எது அடி எதுகைத் தொடையைச் சார்ந்தது அருமறை வினைஞரால் அடைபடு கதவும் திருமறைக் காட்டில் திறந்ததும் எம்மொழி?**

அ)அருமறை - அடைபடு

ஆ)திருமறை - திறந்ததும்

இ)அருமறை - எம்மொழி

ஈ)அருமறை - திருமறை

விடை : ஈ)அருமறை - திருமறை

**39.இணை எதுகையைக் கண்டறிக**

அ)நாறா மலரனையர்

ஆ)செல்வத்துள் செல்வம்

இ)ஊழையும் உப்பக்கம்

ஈ)சீரைத் தந்த தமிழே வாழ்க!

விடை : ஆ)செல்வத்துள் செல்வம்

**40.பின்வரும் அடிகளில அமைந்துள்ள இயைபுத் தொடரைத் தேர்வு செய்க**
**திங்கள்முடி சூடுமலை தென்றல் விளையாடு மலை**
**தங்கு புயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை**
அ)சூடுமலை - தென்றல்
ஆ)தங்குபுயல் - தமிழ் முனிவன்
இ)தமிழ் முனிவன் - வாழுமலை
ஈ)விளையாடுமலை - வாழுமலை
விடை : ஈ)விளையாடுமலை - வாழுமலை

**41.எவ்வகை வாக்கியம் என்பதனைக் கண்டறிக**
**அக்குளத்தில் காணப்படுவது அல்லியா? தாமரையா?**
அ)அறிவினா
ஆ)கொளல் வினா
இ)ஐய வினா
ஈ)ஏவல் வினா
விடை : இ)ஐய வினா

**42.எவ்வகை வாக்கயம் எனக் கண்டறிக**
**'அய்யோ! அய்யோ! என் கழனியை எல்லாம் புலி அழிக்கின்றதே!**
அ)செய்தி வாக்கியம்
ஆ)உணர்ச்சி வாக்கியம்
இ)தண்வினை வாக்கியம்
ஈ)பிறவினை வாக்கியம்
விடை : ஆ)உணர்ச்சி வாக்கியம்

**43.தன்வினை,பிறவினை,செய்வினை,செயப் பாட்டு வினை அறிக**
**மென்பொருள் பூங்கா தமிழக அரசால் நிறுவப்பட்டது**
அ)செய்வினை
ஆ)செயப்பாட்டு வினை
இ)தன்வினை
ஈ)பிறவினை
விடை : ஆ)செயப்பாட்டு வினை

**44.தன்வினை பிறவினை,செய்வினை, செயப்பாட்டு வினை அறிக**
**'கம்பர் இராமாயணத்தை இயற்றினார்"**
அ)செய்வினை
ஆ)எதிர்மறை வினை
இ)செயப்பாட்டு வினை
ஈ)பிறவினை
விடை : அ)செய்வினை

**45.எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக**
**'சிற்பி சிலையைச் செய்வித்தான்"**
அ)தன்வினை
ஆ)செயப்பாட்ட வினை
இ)செய்வினை
ஈ)பறிவினை
விடை : ஈ)பறிவினை

**46.எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக**
**'ஓட்டுநர் பேருந்து ஓட்டினார்"**
அ)தன்வினை
ஆ)பிறவினை
இ)எதிர்மறை வினை
ஈ)செயப்பாட்டு வினை
விடை : அ)தன்வினை

**47.தன்வினை,பிறவினை,செய்வினை,செயப் பாட்டு வினை வாக்கியங்களைத் கண்டறிக**
**'பால் குடித்தேன்"**
அ)எதிர்மறை வினை
ஆ)தன்வினை
இ)செயப்பாட்டு வினை
ஈ)பிறவினை
விடை : ஆ)தன்வினை

**48.எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக**

**'அறிஞர் அண்ணா மக்களால் போற்றப்படுகின்றார்"**

அ)தன்வினை

ஆ)பிறவினை

இ)செயப்பாட்டு வினை

ஈ)எதிர்மறை வினை

விடை : இ)செயப்பாட்டு வினை

**49.உவமையால் விளக்கப் பெறும் பொருள் யாது ?**
**மதில்மேல் பூனை போல"**

அ)நிலையானது

ஆ)பொருத்தமானது

இ)கடினமானது

ஈ)உறுதியில்லாதது

விடை : ஈ)உறுதியில்லாதது

**50.ஞாயிற்றைக் கைமறைப்பார் இல் உவமை விளக்கும் பொருள்**

அ)உலகில் நடக்கும் செயல்

ஆ)உலகில் நடைபெறாத செயல்

இ)சிறப்புடைய செயல்

ஈ)இழிவான செயல்

விடை : ஆ)உலகில் நடைபெறாத செயல்

**51.வீரபாண்டிய கட்ட பொம்மன் ஆங்கிலேயரை முதன் முதலில் எதிர்த்தான்" - இவ் விடைக்கேற்ற வினா யாது?**

அ)ஆங்கிலேயர் யாரை எதிர்த்தனர்?

ஆ)ஆங்கிலேயரை முதன்முதலில் எதிர்த்தவன் யார்?

இ)வீரபாண்டிய கட்டபொம்மான் எப்போது போரிட்டான்?

ஈ)வீரபாண்டிய கட்டபொம்மன் எங்கு போரிட்டான்?

விடை : ஆ)ஆங்கிலேயரை முதன்முதலில் எதிர்த்தவன் யார்?

**52.விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க 'இளமையில் கல்வி கற்க வேண்டும்"**

அ)இளமையில் கல்வி கற்க வேண்டுமா?

ஆ)இளமையில் கல்வி கற்க வெண்டுமா?

இ)கல்வி என்றால் என்ன?

ஈ)எங்கு கல்வி கற்க வேண்டும்?

விடை : ஆ)இளமையில் கல்வி கற்க வெண்டுமா?

**53.விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்திடுக 'திருக்குறள் ஓர் அற இலக்கியம்"**

அ)திருக்குறளின் பரிவுகள் யாவை?

ஆ)திருக்குறள் இரு வரி இலக்கியமா?

இ)திருக்குறள் எந்த வகை இலக்கியம்?

ஈ)திருக்குறள் சங்க இலக்கியமா?

விடை : இ)திருக்குறள் எந்த வகை இலக்கியம்?

**54.விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க 'பிசிராந்தையார் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்"**

அ)நட்புக்கு இலக்கணமாகத் திகழந்தவர் யார்?

ஆ)இலக்கணமாகத் திகழ்பவர் யார்?

இ)நட்புக்குச் சிறந்த புலவர் யார்?

ஈ)நட்புக்குச் சிறப்பானவர் யார்?

விடை : அ)நட்புக்கு இலக்கணமாகத் திகழந்தவர் யார்?

**55.விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க 'தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுபவர் திரு.வி.க ஆவார்**

அ)தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுவது யார்?

ஆ)தமிழ்த் தென்றல் என்று கூறப்படுவது எது?

இ)தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்படுபவர் யார்?

ஈ)திரு.வி.க வின் சிறப்புப் பெயர் தமிழ்த் தென்றலா?

விடை : இ)தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்படுபவர் யார்?

**56.விடைக்கேற்ற வினாவைத் தோந்தெடுக்க 'அறிவுடையவரை உலகம் மதிக்கிறது"**

அ)உலகம் மதிக்க என்ன செய்ய வேண்டும்?

ஆ)யாரை உலகம் மதிக்கிறது?

இ)யார் உலகத்தை மதிப்பது?

ஈ)அறிவுடையவர் உலகத்தை மதிக்கிறன்றனரா?

விடை : ஆ)யாரை உலகம் மதிக்கிறது?

**57.காந்தியடிகள் நமது நாடு விடுதலை பெறுவதற்காக அயராது உழைத்தார் - எவ்வகை வாக்கியம்?**

அ)உணர்ச்சி வாக்கியம்

ஆ)செய்தி வாக்கியம்

இ)வினா வாக்கியம்

ஈ)தனி வாக்கியம்

விடை : ஆ)செய்தி வாக்கியம்

**58.பாரதிதாசன் அழகின் சிரிப்பை இயற்றினார் -எவ்வகை வினை வாக்கியம்**

அ)தன்வினை

ஆ)பிறவினை

இ)எதிர்மறை வினை

ஈ)செயப்பாட்டு வினை

விடை : அ)தன்வினை

**59.தாஜ்மஹால் தமிழகச் சிற்பியால் கட்டப்பட்டது -எவ்வகை வாக்கியம்?**

அ)செய்வினை வாக்கியம்

ஆ)தன்வினை வாக்கியம்

இ)செயப்பாட்டு வினை வாக்கியம்

ஈ)பிறவினை வாக்கியம்

விடை : இ)செயப்பாட்டு வினை வாக்கியம்

**60.எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக 'என்று தணியும் இந்தச் சுதந்திரத் தாகம்?**

அ)வினா வாக்கியம்

ஆ)உணர்ச்சி வாக்கியம்

இ)செய்தி வாக்கியம்

ஈ)கட்டளை வாக்கியம்

விடை : அ)வினா வாக்கியம்

**61.பெயர்ச்சொல்லின் வகையறிக:'மரம்"**

அ)தொழிற்பெயர்

ஆ)பொருட்பெயர்

இ)சினைப்பெயர்

ஈ)குணப்பெயர்

விடை : ஆ)பொருட்பெயர்

**62.பெயர்ச்சொல்லின் வகையறிக 'மலை"**

அ)இடுகுறிப் பெயர்

ஆ)காரணப்பெயர்

இ)தன்மைப் பெயர்

ஈ)முன்னிலை பெயர்

விடை : அ)இடுகுறிப் பெயர்

**63.பெயர்ச்சொல்லின் வகையறிக "சதுரம்"**

அ)சினைப்பெயர்

ஆ)பொருட்பெயர்

இ)காலப்பெயர்

ஈ)பண்புப்பெயர்

விடை : ஈ)பண்புப்பெயர்

**64.பெயர்ச்சொல்லின் வகையறிக 'கடை"**

அ)பொருட்பெயர்

ஆ)இடப்பெயர்

இ)குணப்பபெயர்

ஈ)சினைப்பெயர்

விடை : ஆ)இடப்பெயர்

**65.இலக்கணக் குறிப்பு எழுதுக 'கேளாச் செவி"**

அ)ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

ஆ)இன்னிசை அளபெடை

இ)பெயரெச்சம்

ஈ)வினையெச்சம்
விடை : அ)ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**66.இலக்கணக் குறிப்பு தேர்ந்தெடுக்க ’வாழ்க"**
அ)வியங்கோள் வினைமுற்று
ஆ)விளிச் சொல்
இ)வினைத்தொகை
ஈ)வினைச்சொல்
விடை : அ)வியங்கோள் வினைமுற்று

**67.இலக்கணக் குறிப்பு வரைக: ’ஒலிகடல்"**
அ)வினைத்தொகை
ஆ)பண்புத்தொகை
இ)ஆகுபெயர்
ஈ)வினைமுற்று
விடை : இ)ஆகுபெயர்

**68.இலக்கணக் குறிப்பு வரைக : மாவீரன்"**
அ)வினைத்தொகை
ஆ)பண்புத்தொகை
இ)ஆகுபெயர்
ஈ)வினைமுற்று
விடை : அ)வினைத்தொகை

**69.இலக்கணக் குறிப்பு வரைக ’மாவீரன்"**
அ)இயற்சொல்
ஆ)உரிச்சொல் தொடர்
இ)திரிசொல்
ஈ)வடசொல்
விடை : ஆ)உரிச்சொல் தொடர்

**70.’அஞ்சு" என்னும் சொல் ’ஐந்து" என்னும் சொல்லின்**
அ)முதற்போலி
ஆ)முற்றுப்போலி
இ)கடைப்போலி
ஈ)இடைப்போலி
விடை : ஆ)முற்றுப்போலி

**71.சந்திப் பிழை இல்லாத தொடரைத் தேர்க**
அ)தொலைகாட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதை குறைத்து தெளிவாகப் படி
ஆ)தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதை குறைத்து தெளிவாக படி
இ)தொலைக்காட்சி நிகழ்சிகளைப் பார்ப்பதைக் குறைத்துத தெளிவாகப் படி
ஈ)தொலைகாட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைக் குறைத்து தெளிவாகப் படி.
விடை : இ)தொலைக்காட்சி நிகழ்சிகளைப் பார்ப்பதைக் குறைத்துத தெளிவாகப் படி

**72.சந்திப் பிழை நீக்கப்பட்ட தொடரைத் தேர்வு செய்க**
அ)வதந்திகள் காட்டு தீப்போல் விரைவாய்ப் பரவும்
ஆ)வதந்திகள் காட்டுத்தீ போல் விரைவாய் பரவும்
இ)வதந்திகள் காட்டுத்தீப்போல் விரைவாய்ப் பரவும்
ஈ)வதந்திகள் காட்டு தீ போல் விரைவாய் பரவும்
விடை : ஆ)வதந்திகள் காட்டுத்தீ போல் விரைவாய் பரவும்

**73.ஒருமை,பன்மை பிழைகளை நீக்குக செயற்கைக்கோள்கள் விண்ணில்.........**
அ)பறக்கிறது
ஆ)பறக்கின்றது
இ)பறக்கின்றன
ஈ)பறவா நின்றன
விடை : இ)பறக்கின்றன

**74.ஒருமை பன்மை பொருந்தியுள்ள தொடரைத் தேர்வு செய்க**
அ)புலி வந்தன எருதுகள் ஒடியது
ஆ)புலி வந்தது எருதுகள் ஒடின

இ)புலி வந்தது எருதுகள் ஓடியது
ஈ)புலி வந்தன எருதுகள் ஓடின
விடை : ஆ)புலி வந்தது எருதுகள் ஓடின

**75.மரபுப் பிழைகள் வழூஉச் சொற்களை நீக்குக**
அ)முருங்கை இலையைச் சமைத்தார்கள்
ஆ)முருங்கைக் கீரையைச் சமைத்தார்கள்
இ)முருங்கைக் தழையைச் சமைத்தார்கள்
ஈ)முருங்கை ஒலையைச் சமைத்தார்கள்
விடை : ஆ)முருங்கைக் கீரையைச் சமைத்தார்கள்

**76.பிறமொழிச் சொற்களை நீக்கிய தொடரைத்தேர்க**
அ)பஜாரில் சில வஸ்துகளை வாங்கச் சென்றோம்
ஆ)கடைத் தெருவில் சில வஸ்துகளை வாங்கச் சென்றோம்
இ)பஜாரில் சில பொருட்களை வாங்கச் சென்றோம்
ஈ)கடைததெருவில் சில பொருட்களை வாங்கச் சென்றோம்
விடை : ஈ)கடைததெருவில் சில பொருட்களை வாங்கச் சென்றோம்

**77.Town - என்பதன் சரியான தமிழாக்கம்**
அ)மாநகரம்
ஆ)ஊர்
இ)நகரம்
ஈ)கிராமம்
விடை : இ)நகரம்

**78.Parliament -என்பதன் சரியான தமிழ்ச் சொல்**
அ)சட்டமன்றம்
ஆ)நாடாளுமன்றம்
இ)மாகராட்சி
ஈ)உயர் நீதிமன்றம்
விடை : ஆ)நாடாளுமன்றம்

**79.Consumer - என்பதன் சரியான தமிழ்ச் சொல்**
அ)உண்பவர்
ஆ)வாடிக்கையாளர்
இ)நுகர்வோர்
ஈ)அனுபவிப்பவர்
விடை : இ)நுகர்வோர்

**80.Congratulation - என்ற ஆங்கிலச் சொல்லின் நேரான தமிழாக்கம்**
அ)வருக! வருக!
ஆ)வாழ்க வளமுடன்
இ)நல்வாழ்த்துக்கள்
ஈ)வருக! வணக்கம்
விடை : இ)நல்வாழ்த்துக்கள்

**81.எதிர்ச்சொல் எழுதுக: ’பழையோர்"**
அ)புதியவர்
ஆ)பழமையானவர்
இ)முன்னோர்
ஈ)சிறியவர்
விடை : அ)புதியவர்

**82.எதிர்ச்சொல் தேர்க ’நண்பன்"**
அ)ஆசான்
ஆ)பகைவன்
இ)புலையன்
ஈ)வல்லவன்
விடை : ஆ)பகைவன்

**83.எதிர்ச்சொல்லைத் தேர்க : ’மறைதல்"**
அ)தெளிதல்
ஆ)காணுதல்
இ)தோன்றல்
ஈ)விளங்குதல்
விடை : இ)தோன்றல்

**84.எதிர்ச்சொல்லைத் தேர்க ’இசை"**
அ)மேன்மை

ஆ)வசை
இ)புகழ்
ஈ)அறிவு
விடை : ஆ)வசை

**85.திரைப்படம்,நாடகம்,கூத்து,கடல் - இவற்றில் பொருந்தாச் சொல் எது?**
அ)நாடகம்
ஆ)கூத்து
இ)திரைப்பாடம்
ஈ)கடல்
விடை : ஈ)கடல்

**86.குழுவுக்குப் பொருந்தாத சொல்லை நீக்குக**
அ)குதிரை
ஆ)குரங்கு
இ)முயல்
ஈ)கழுகு
விடை : இ)முயல்

**87.பொருந்தாச் சொல்லை நீக்குக**
அ)வீண்மீன்
ஆ)துணைக்கோள்
இ)விண்கலம்
ஈ)மின்சார ரயில்
விடை : ஈ)மின்சார ரயில்

**88.பொருந்தாச் சொல்லைக் கண்டெழுதுக**
அ)நல்ல பாம்பு
ஆ)பூரான்
இ)தேள்
ஈ)தவளை
விடை : ஈ)தவளை

**89.பொருந்தாச் சொல்லலைக் கண்டெழுதுக**
அ)துரியோதனன்
ஆ)கண்ணகி
இ)பாஞ்சாலி
ஈ)தருமன்
விடை : ஆ)கண்ணகி

**90.பொருந்தாச் சொல்லைக் கண்டு எழுதுக**
அ)சிங்கம்
ஆ)புலி
இ)யானை
ஈ)பசு
விடை : ஈ)பசு

**91.’நெடுந்தொகை" என்ற அடைமொழியால் குறிக்கப் பெறும் நூல்**
அ)அகநானூறு
ஆ)குறுந்தொகை
இ)புறநானூறு
ஈ)நற்றிணை
விடை : அ)அகநானூறு

**92.’தமிழ் மறை" எனப் போற்றப்படுவது**
அ)திருமந்திரம்
ஆ)திருக்கோவை
இ)திருக்குறள்
ஈ)திருப்புகழ்
விடை : இ)திருக்குறள்

**93.பிரித்தெழுதுக ’வடவெல்லை"**
அ)வட + பெயல்லை
ஆ)வடக்கு + எல்லை
இ)வட + எல்லை
ஈ)வடம் + எல்லை
விடை : ஆ)வடக்கு + எல்லை

**94.பிரித்தெழுதுக :’நன்றன்று"**
அ)நன்று + நன்று
ஆ)நன்று + அன்று
இ)நன் + அன்று
ஈ)நல் + அன்று
விடை : ஆ)நன்று + அன்று

**95.பிரித்து எழுதுக : ’ஏதிலா"**
அ)ஏது + இலா

ஆ)எ + திலா
இ)ஏதி + அன்று
ஈ)ஏ + இலா
விடை : அ)ஏது + இலா

**96.'பேரானந்தம் " - இதைப் பரித்தால் வருவது**
அ)பேர் + ஆனந்தம்
ஆ)பெரு + ஆன்நதம்
இ)பெருமை + ஆனந்தம்
ஈ)பெரிய + ஆனந்தம்
விடை : இ)பெருமை + ஆனந்தம்

**97.பிரித்தெழுதுக :'தீந்தமிழ்";**
அ)தீது + தமிழ்
ஆ)தீம் + தமிழ்
இ)தீமை + தமிழ்
ஈ)தீந் + தமிழ்
விடை : ஆ)தீம் + தமிழ்

**98.பிரித்தெழுதுக :' திருவருட்பா"**
அ)திரு + அருள் + பா
ஆ)திரு + வருள் + பா
இ)திருவருட் + பா
ஈ)திரு + வருட்பா
விடை : அ)திரு + அருள் + பா

**99.எதிர்ச்சொல் தருக: 'கனிவு"**
அ)இரக்கம்
ஆ)கனி
இ)காய்
ஈ)வெறுப்பு
விடை : ஈ)வெறுப்பு

**100.எதிர்சொல் எழுதுக : 'தண்ணீர்"**
அ)செந்நீர்
ஆ)பன்னீர்
இ)வெந்நீர்
ஈ)கண்ணீர்
விடை : இ)வெந்நீர்

**101.பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க**
1.விண் அ.உலகம்
2.வளி ஆ.நீர்
3.பார் இ.ஆகாயம்
4.புனல் ஈ.காற்று
அ)(1-ஈ)(2-இ)(3-அ)(4-ஆ)
ஆ)(1-இ)(2-ஈ)(3-அ)(4-ஆ)
இ)(1-அ)(2-ஆ)(3-ஈ)(4-இ)
ஈ)(1-இ)(2-ஈ)(3-ஆ)(4-அ)
விடை : ஆ)(1-இ)(2-ஈ)(3-அ)(4-ஆ)

**102.பொருத்தமான பொரளைத் தெர்வு செய்க**
1.கிலி அ.முதுமை
2.கிழம் ஆ.இசை
3.கீதம் இ.அச்சம்
4.குடில் ஈ.வீடு
அ)(1-இ)(2-அ)(3-ஆ)(4-ஈ)
ஆ)(1-அ)(2-ஆ)(3-இ)(4-ஈ)
இ)(1-ஈ)(2-இ)(3-ஆ)(4-அ)
ஈ)(1-இ)(2-ஆ)(3-அ)(4-ஈ)
விடை : அ)(1-இ)(2-அ)(3-ஆ)(4-ஈ)

**103.பெயரின் செயலறிந்து பொருத்துக**
பெயர் செயல்
1.கரி அ.ஓட்டம்
2.பரி ஆ.தந்திரம்
3.நரி இ.கொடை
4.ஒரி ஈ.பலம்
அ)(1-ஆ)(2-அ)(3-ஈ)(4-இ)
ஆ)(1-அ)(2-ஆ)(3-இ)(4-ஈ)
இ)(1-இ)(2-அ)(3-ஆ)(4-ஈ)
ஈ)(1-ஈ)(2-அ)(3-ஆ)(4-இ)
விடை : ஈ)(1-ஈ)(2-அ)(3-ஆ)(4-இ)

**104.பொருத்துக**
நூல் நூலாசிரியர்

1.கலிங்கத்துப்பரணி அ.சிவப்பிரகாச சுவாமிகள்
2.பூங்கொடி ஆ.சேக்கிழார்
3.பெரியபுராணம் இ.கவிஞன் முடியரசன்
4.திருவெங்கை உலா ஈ.செயங்கொண்டார்
அ)(1-அ)(2-ஆ)(3-இ)(4-ஈ)
ஆ)(1-ஆ)(2-அ)(3-ஈ)(4-இ)
இ)(1-இ)(2-ஈ)(3-அ)(4-ஆ)
ஈ)(1-ஈ)(2-இ)(3-ஆ)(4-அ)
விடை : ஈ)(1-ஈ)(2-இ)(3-ஆ)(4-அ)

**105.பொருத்துக**
நூல் நூலாசிரியர்
1.திருக்குறள் அ.தொல்காப்பியர்
2.கம்ப இராமாயணம் ஆ.திரிசூடராசப்ப கவிராயர்
3.குற்றாலக் குறவஞ்சி இ.திருவள்ளுவர்
4.தொல்காப்பியம் ஈ.கம்பர்
அ)(1-இ)(2-ஈ)(3-ஆ)(4-அ)
ஆ)(1-ஆ)(2-அ)(3-இ)(4-ஈ)
இ)(1-ஆ)(2-ஈ)(3-அ)(4-இ)
ஈ)(1-ஈ)(2-இ)(3-ஆ)(4-அ)
விடை : அ)(1-இ)(2-ஈ)(3-ஆ)(4-அ)

**106.புகழ்பெற்ற நூலுக்குரிய நூலாசிரியரைத் தேர்வு செய்க**
நூல் நூலாசிரியர்
1.சிறுபஞ்சமூலம் அ.கணிமேதாவியார்
2.ஏலாதி ஆ,காரியாசன்
3.நாலடியார் இ.திருவள்ளுவர்
4.முப்பால் ஈ.சமண முனிவர்கள்
அ)(1-ஈ)(2-இ)(3-அ)(4-ஆ)
ஆ)(1-ஆ)(2-அ)(3-ஈ)(4-இ)
இ)(1-அ)(2-ஆ)(3-இ)(4-ஈ)
ஈ)(1-இ)(2-ஈ)(3-ஆ)(4-அ)
விடை : ஆ)(1-ஆ)(2-அ)(3-ஈ)(4-இ)

**107.இத்தொடரால் குறிக்கப் பெறும் சான்றோர் தெய்வப் புலவர் என்று போற்றப் பெறுபவர்**
அ)அகத்தியர்
ஆ)தொல்காப்பியர்
இ)திருவள்ளுவர்
ஈ)பரிமேலழகர்
விடை : இ)திருவள்ளுவர்

**108.'கவி யோகி" என்ற தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்**
அ)சுத்தானந்த பாரதியார்
ஆ)சுப்பிரமணிய பாரதியார்
இ)சோமசுந்தர பாரதியார்
ஈ)பாரதிதாசனார்
விடை : அ)சுத்தானந்த பாரதியார்

**109.தொடரும் தொடர்பும் அறிதல் இத்தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர் 'கல்வியில் பெரியார்"**
அ)திருவள்ளுவர்
ஆ)இளங்கொவடிகள்
இ)கம்பர்
ஈ)சேக்கிழார்
விடை : இ)கம்பர்

**110.'மண நூல்" என்று அழைக்கப்படுவது**
அ)திருக்குறள்
ஆ)பாஞ்சாலி சபதம்
இ)சீவகசிந்தாமணி
ஈ)கம்பராமாயணம்
விடை : இ)சீவகசிந்தாமணி

**111.அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க**
**“ஒண்ணுதல்,இம்மை,ஆற்றல்,அவையம், ஏசுதல்"**
அ)ஏசுதல்,இம்மை,அவையம்,ஆற்றல்,ஒண்ணுதல்

ஆ)இம்மை,ஒண்ணுதல்,ஆற்றல்,ஏசுதல்,அவையம்
இ)அவையம்,ஆற்றல்,இம்மை,ஏசுதல்,ஒண்ணுதல்
ஈ)அடையம்,இம்மை,ஆற்றல்,ஒண்ணுதல்,ஏசுதல்.
விடை :
இ)அவையம்,ஆற்றல்,இம்மை,ஏசுதல்,ஒண்ணுதல்

**112.அகர வரிசைப்படி சொற்களைத் தேர்வு செய்க**

அ)இலங்கை,அணில்,ஏணி,உலகம்
ஆ)அணில்,ஏணி,உலகம்,இலங்கை
இ)அணில்,இலங்கை,உலகம்,ஏணி
ஈ)உலகம்,இலங்கை,அணில்,ஏணி
விடை : இ)அணில்,இலங்கை,உலகம்,ஏணி

**113.சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக**
**'தெய்வம் பிதாவும் முன்னறி அன்னையும்"**

அ)அன்னையும் தெய்வம் பிதாவும் முன்னிற
ஆ)முன்னறி தெய்வம் பிதாவும் அன்னையும்
இ)அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஈ)பிதாவும் அன்னையும் தெய்வம் முன்னறி
விடை : இ)அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

**114.சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக**

அ)குறைவற்ற வாழ்வே நோயற்ற செல்வம்
ஆ)குறைவற்ற நோயே வாழ்வற்ற செல்வம்
இ)நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
ஈ)நோயற்ற செல்வம் குறைவற்ற வாழ்க்கை
விடை : இ)நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

**115.சொற்களை ஒழுங்குபடுத்தி முறையாக அமைந்த சொற்றொடர்**

அ)சாலைகள்,மரங்களை தோறும் வளர்க்கலாம்
ஆ)வளர்க்காலம் மரங்களை சாலைக்ள தோறும்
இ)சாலைகள் தோறும வளர்கலாம் மரங்களை
ஈ)சாலைக்ள தோறும் மரங்களை வளர்க்கலாம்
விடை : ஈ)சாலைக்ள தோறும் மரங்களை வளர்க்கலாம்

**116.சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக**

அ)சிறந்த மருந்து மன அமைதிக்கு தியானம்
ஆ)தியானம் மன அமைதிக்கு சிறந்த மருந்து
இ)மருந்த சிறந்த தியானம் மன அமைதிக்கு
ஈ)மன அமைதிக்குத் தியானம் சிறந்த மருந்து
விடை : ஈ)மன அமைதிக்குத் தியானம் சிறந்த மருந்து

**117.சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்கு**

அ)நல்ல நாடு பாருக்குள்ளே எங்கள் பாரத நாடு
ஆ)பாருக்குள்ளெ நல்ல நாடு எங்கள் பாரத நாடு
இ)பாருக்குள்ளெ எங்கள் நல்ல நாடு பாரத நாடு

ஈ)நல்ல நாடு எங்கள் பாரத நாடு பாருக்குள்ளே

விடை : ஆ)பாருக்குள்ளெ நல்ல நாடு எங்கள் பாரத நாடு

**118.சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக**

அ)அழியின் உடம்பார் அழிவர் உயிரார்

ஆ)உயிரார் அழிவர் அழியின் அழியின்

இ)அழிவர் உடம்பார் உயிரார் அழியின்

ஈ)உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

விடை : ஈ)உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

**119.பெயர்ச்சொல்லின் வகையறிக : ’ஊர் கூடியது"**

அ)தொழிலாகு பெயர்

ஆ)இடவாகு பெயர்

இ)பண்பாகு பெயர்

ஈ)உவமை ஆகுபெயர்

விடை : ஆ)இடவாகு பெயர்

**120.’பூ" - எவ்வகைப் பெயர்ச்சொல்?**

அ)சினைப்பெயர்

ஆ)இடப்பெயர்

இ)காலப்பெயர்

ஈ)குணப்பெயர்

விடை : அ)சினைப்பெயர்